## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

CC.No.98-2024 **L.W.3** **P.W.3**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.முருகேசன் | | |
| Father/Husband Name | பெருமாள் | | |
| Village | இறையூர் | | |
| Taluk | திட்டக்குடி | Age | 80 |
| District | கடலூர் | Time | 3.20 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 26.06.2025 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்

***நான்கு எதிரிகளும் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் இறையூரில் வசித்து தின கூலி வேலைசெய்து வருகிறேன். எனக்கு அசா.1 தீபலட்சுமியை தெரியும், அசா.2 கொளஞ்சியம்மாள் எனது மனைவி, , பட்டியல் சாட்சிகள் 4 முதல் 7 வரையுள்ளவர்கள் மற்றும் ஆஜர் எதிரிகள் நால்வரையும் தெரியும். கடந்த நான்கு வரூடத்திற்கு முன்பாக தேதி மாதம் ஞாபகமில்லை. மதியம் 3.00 மணியளவில் பைப் லைன் போடுவதற்கு ஜெயவேல் என்பவர் வந்தார் மலர்கொடி தடுத்தார். அதையும் மீறி ஜெயவேல் பைப்போட்டார். அதன்பிறகு ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டார்கள். பிறகுஅவர்கள் சென்றுவிட்டார்கள். எனக்கு பைப்பும்போட்டாச்சி. என்னுடைய கொல்லையில் 10 ரூபாய் லாபத்திற்காக பைப்போட வந்தவர்களை மலர்கொடிதான் பிரச்சனை செய்தார் அவர் இங்கு இல்லை அவருடைய மருமகள், மகன், வீட்டுக்காரர் இங்கு வந்துள்ளார்கள். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**கற்றறிந்த அரசு வழக்கறிஞர் கண்ணுற்ற சாட்சி போலிஸார் விசாரணையில் எதிரிகள் நால்வரும் அசா.1 தீபலட்சுமியை காமகுரோதமான வார்த்தைகளால் திட்டியதை பற்றியும், அடித்ததை பற்றியும் கொலை மிரட்டல் விடுத்த சம்பவத்தை பற்றியும், அடித்த ஆயுதமான கட்டையை பற்றியும், தீபலட்சுமியை சேலையை பிடித்து இழுத்ததை பற்றியும் போலிஸாரிடம் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது மறைத்து சாட்சியம் அளிப்பதால் பிறழ் சாட்சியாக பாவிக்க கோரினார் கோரிக்கை ஏற்க்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சிய சட்டபிரிவு 154(1) ( பி.எஸ்.ஏ பிரிவு 157(1) )ன் கீழ் குறுக்கு விசாரணை**

1. கடந்த 01–03–2022 ம் மதியம் 12.00 மணிக்கு அசா.1 தீபலட்சுமி இடத்திற்கு அருகே அவர்கள் சர்வேயரை வைத்து அவர்கள் இடத்தில் கல் நட்டு இருந்ததாகவும் அந்த கல்லை ஆஜர் எதிரிகள் பிடுங்கியதாகவும், சம்பவத்தை பற்றிகேள்விப்பட்டு வந்த அசா.1 தீபலட்சுமியை ஆஜர் 3

வது எதிரி காமகுரோதமான வார்த்தைகளால் திட்டியதாவும், 4 வது எதிரி சக்திமணி சேலையை பிடித்து இழுத்ததகாவும்,. ஆஜர் எதிரிகள் நால்வரும் காமகுரோதமான வார்த்தைகளால் திட்டி அடித்து கொலை மிரட்டல் விடுத்த சம்பவத்தை நானும், எனது கணவரும் நேரில் பார்த்ததாக போலிஸாரின் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றுசொன்னால் ? சரிதான்.

2.அரசு தரப்பில் மேற்ச்சொன்ன சம்பவத்தின் தொடர்சியாக முதல் விசாணையில் மேற்சொன்ன சங்கதிகளை சொல்லாததற்கு காரணம் எனக்கு வயது மூப்பு மற்றும் ஞாபக மறதிதான் காணரம் என்று சொன்னால் ? சரிதான். பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் ? இல்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1.அசா.1 ன் குடும்பத்திற்கும் ஆஜர் எதிரிகளின் குடும்பத்திற்கும் திட்டக்குடி சார்புநீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ள விபரம் தெரியுமா என்றால் ? தெரியாது. அசா.1 புகார்தாரான தீபலட்சுமியின் கணவர் ஜெயவேல் என்பவரை போலிஸார் கைதுசெய்த சம்பவம் தெரியுமா என்றால் ? தெரியும். மேற்ச்சொன்ன ஜெயவேல் என்பவரை கைதுசெய்த சம்பவம் ஒரு சம்பவம் நடந்தது என்றால் ? சரிதான். நான் தற்போது சமூகம் நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் பைப்லைன் மற்றும் கல் பிடுங்கிய இரு சம்பவத்தை குறிப்பிட்டுள்ளேன் அதில் எந்த சம்பவத்திற்கு சாட்சிசொல்ல வந்துள்ளேன் என்றால் ? ஜெயவேல் கைதுசம்மந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். போலிஸார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் சமூகம் நீதிமன்றத்தில் கூறியுள்ள சங்கதிகளைத்தான் போலிஸாரின் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் ?சரிதான். புகார்தாரர் தீபலட்சுமியும், அவருடைய கணவரும் எனக்கு உடன் பங்காளிகள் முறையாவார்கள். நான்சொல்வதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் புகார்தாரர் தீபலட்சுமியும், அவருடைய கணவரும் எனக்கு உடன் பங்காளிகள் என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. புகார் தாரர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ? தெரியும். மருத்துவமனைக்கு எப்படி சென்றார் என்று எனக்கு தெரியாது. புகார் தாரர் என்று மருத்துவமனைக்கு சென்றார் என்றால் ? சம்பவம் நடந்த அன்றைய தினமே சென்றார்.

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

CC.No.98-2024 **L.W.2** **P.W.2**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.கொளஞ்சியம்மாள் | | |
| Father/Husband Name | முருகேசன் | | |
| Village | இறையூர் | | |
| Taluk | திட்டக்குடி | Age | 60 |
| District | கடலூர் | Time | 3.10 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 26.06.2025 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்

***நான்கு எதிரிகளும் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் இறையூரில் வசித்து தின கூலி வேலைசெய்து வருகிறேன். எனக்கு அசா.1 தீபலட்சுமியை தெரியும், பட்டியல் சாட்சி 3 எனது கணவர், பட்டியல் சாட்சிகள் 4 முதல் 7 வரையுள்ளவர்கள் மற்றும் ஆஜர் எதிரிகள் நால்வரையும் தெரியும். கடந்த ஒரு வரூடத்திற்கு முன்பாக தேதி மாதம், நேரம் ஞாபகமில்லை. இறையூரில் உள்ள என் கொள்ளைக்குப்பக்கத்தில் தீபலட்சுமியும், சக்தி மணியும் அடித்துக்கொண்டார்கள். வழக்குசம்மந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது நான் சமூகம் நீதிமன்ற அழைப்பாணையை இன்று பெற்றுசாட்சியம் சொல்லவந்துள்ளேன். போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**கற்றறிந்த அரசு வழக்கறிஞர் கண்ணுற்ற சாட்சி போலிஸார் விசாரணையில் எதிரிகள் நால்வரும் அசா.1 தீபலட்சுமியை காமகுரோதமான வார்த்தைகளால் திட்டியதை பற்றியும், அடித்ததை பற்றியும் கொலை மிரட்டல் விடுத்த சம்பவத்தை பற்றியும், அடித்த ஆயுதமான கட்டையை பற்றியும், தீபலட்சுமியை சேலையை பிடித்து இழுத்ததை பற்றியும் போலிஸாரிடம் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது மறைத்து சாட்சியம் அளிப்பதால் பிறழ் சாட்சியாக பாவிக்க கோரினார் கோரிக்கை ஏற்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சிய சட்டபிரிவு 154(1) ( பி.எஸ்.ஏ பிரிவு 157(1) )ன் கீழ் குறுக்கு விசாரணை**

கடந்த 01–03–2022 ம் மதியம் 12.00 மணிக்கு அசா.1 தீபலட்சுமி இடத்திற்கு அருகே அவர்கள் சர்வேயரை வைத்து அவர்கள் இடத்தில் கல் நட்டு இருந்ததாகவும் அந்த கல்லை ஆஜர் எதிரிகள் பிடுங்கியதாகவும், சம்பவத்தை பற்றிகேள்விப்பட்டு வந்த அசா.1 தீபலட்சுமியை ஆஜர் 3

வது எதிரி காமகுரோதமான வார்த்தைகளால் திட்டியதாவும், 4 வது எதிரி சக்திமணி சேலையை பிடித்து இழுத்ததகாவும், ஆஜர் எதிரிகள் நால்வரும் காமகுரோதமான வார்த்தைகளால் திட்டி அடித்து கொலை மிரட்டல் விடுத்த சம்பவத்தை நானும், எனது கணவரும் நேரில் பார்த்ததாக போலிஸாரின் விசாரணையில்சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள்நால்வரும் எனது ஊர்க்காரர்கள் என்பதால் அரசுதரப்பிலிருந்து முழுமையாக விலகி ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**CC.No.98-2024** **L.W.1** **P.W.1**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.தீபலட்சுமி | | |
| Father/Husband Name | ஜெயவேல் | | |
| Village | இறையூர் | | |
| Taluk | திட்டக்குடி | Age | 31 |
| District | கடலூர் | Time | 2.40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 26.06.2025 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்

***நான்கு எதிரிகளும் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் இறையூரில் வசித்து விவசாய வேலைசெய்து வருகிறேன். எனக்கு பட்டியல் சாட்சிகள் 2 முதல் 7 வரையுள்ளவர்கள் மற்றும் ஆஜர் எதிரிகள் நால்வரையும் தெரியும். கடந்த 2022 ம் வரூடம் தேதி, மாதம் சரியாக தெரியவில்லை. வயல்வெளியில் P.W வாய்க்காலில் பைப்லைனை எனது கணவர் முருகேசன் மற்றும் இராமலிங்கம் வயலுக்காக பைப்லைன் போட்டார்கள். மேற்ச்சொன்ன சம்பவம் சுமார் காலை 10.00 மணியிருக்கும். பரமசிவத்தின் மனைவி தடுத்தார். பைப்லைன் போடக்கூடாது என்று மலர்கொடி மற்றும் சக்திமணி தடுத்தார்கள். ஆஜர் 4 வது எதிரி சக்தி மணி சமூகம் நீதிமன்றத்தில் ஆஜர், அவர்கள்இருவருக்கும் சண்டை நடந்தது. என் ஒப்படியா வடிவழகி மலர்கொடியை தள்ளிவிட்டார் அதில் மலர்கொடி கீழேவிழுந்துவிட்டார். ஆஜர் எதிரிகள் அடித்தது சம்மந்தமாக காவல் நிலையம்சென்று புகார்கொடுத்தனர். அப்போது நாங்களும் காவல் நிலையத்தில்தான் இருந்தோம். நாங்கள் எங்கள் மாமனாரின் இடத்தை ஒரு சர்வேயர் மூலமாக அளந்து கல் போட்டுவிட்டோம். நாங்கள்பெண்ணாடம் காவல் நிலையத்தில் இருந்தபோதுஆஜர் மூன்றாவது எதிரிஅந்த கல்லினை எடுத்துவிட்டனர் என்ற சம்பவத்தை பட்டியல் சாட்சி 2 கொளஞ்சியம்மாள், பட்டியல் சாட்சி 3 முருகேசன் எங்களுக்குசொன்னார்கள். பிறகு சர்வேயரை வைத்து எங்கள் இடத்தில் வைத்த கல்லை அவர்கள் பிடுங்கி விட்டார்கள் என்று நாங்களும் காவல் நிலையத்தில் புகார்கொடுத்தோம். தற்போது சமூகம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் எழுத்துமூலமான கையொப்பத்துடன் கூடிய புகார்மனு, அதில் உள்ளகையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். போலிஸார் என்னை விசாரித்தனர்.

**கற்றறிந்த அரசு வழக்கறிஞர் புகார் மற்றும் போலிஸார் விசாரணையில் எதிரிகள் நால்வரும் தன்னை காமகுரோதமான வார்த்தைகளால் திட்டியதை பற்றியும், அடித்ததை பற்றியும் கொலை மிரட்டல் விடுத்த சம்பவத்தை பற்றியும், அடித்த ஆயுதமான கட்டையை பற்றியும், தன் சேலையை பிடித்து இழுத்ததை பற்றியும் போலிஸாரிடம் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது மறைத்து சாட்சியம் அளிப்பதால் பிறழ் சாட்சியாக பாவிக்க கோரினார் கோரிக்கை ஏற்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சிய சட்டபிரிவு 154(1) ( பி.எஸ்.ஏ பிரிவு 157(1) )ன் கீழ் குறுக்கு விசாரணை**

கடந்த 01–03–2022 ம் தேதி மதியம் 12.00 மணிக்கு ஆஜர் எதிரிகள் நாங்கள் சர்வேயர் மூலம் அளந்து கல் போட்டதை பார்த்து 1 வது எதிரி பரமசிவம், 2 வது எதிரி சிவக்குமார், 3 வது எதிரி பர்வதவள்ளி, 4 வது எதிரி சக்தி மணி ஆகியோர் வீட்டில் ஆள் இல்லாதபோது அத்து கல்லை பிடுங்கியதாகவும், 1 வது எதிரி பரமசிவம் தேவடியா என திட்டியதாகவும், பத்தினியா என கேட்டதாகவும், 2 வது எதிரி சேலையை பிடித்து இழுத்ததாகவும், கீழே கிடந்த குச்சியை எடுத்து என்னை அடித்ததாகவும் வலிதாங்க முடியாமல் சத்தம் போட்டதாகவும், நேரில் பார்த்த பட்டியல் சாட்சிகள் கொளஞ்சியம்மாள், முருகேசன் என் கணவருக்கு தகவல்சொன்னதாகவும், அங்குகிடந்த இரும்புபாரையை எடுத்து கொலை செய்துவிடுவதாக மிரட்டியதாவும், ஆஜர் 2 வது எதிரி சிவக்குமார் குச்சியை எடுத்து அடித்ததாகவும், மற்ற எதிரிக்ளஅங்கு உடன் இருந்தாகவும் போலிஸர் விசாரணையிலும், புகார் மனுவிலும் சொல்லிவிட்டதாகவும் தற்போது பதற்றத்தின் காரணமாகவம், ஞாபகமறதியின் காரணமாகவும் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ? சரிதான்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழில் எழுத படிக்க தெரியுமா, என்றால் ? தெரியும். புகாரை யார் எழுதியது என்றால் ? என்னுடைய வழக்கறிஞர் எழுதிதந்தார். என் கணவர், என் கொழுந்தனார், ஜெயவேல், ஜெய்சங்கர், செந்தில்முருகன், வடிவேல் ஆகியோர்கள் மீது சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் ? சரிதான். கடந்த 28–02–2022 அன்று ஏற்கனவே எதிரிகளுக்கும் எங்களுக்கும் நடந்த சண்டையில் எனது கொழுந்தனாரை கைதுசெய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் ? தெரியும். நான் என்று புகார் அளித்தேன் என்றால் ? 28–02–2022 அன்றே புகார் கொடுத்தேன். என்னை அதே தேதியில் தர்ன எதிரிகள்அடித்து எனக்கு காயம் ஏற்பட்டது என்றாலும், அதே நாளில்தான் நான் திட்டக்குடிஅரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்குசென்றேன் என்றால் ? சரிதான். என்னை காவல் நிலையத்தில் வைத்துதான் போலிஸார் விசாரித்தார்கள். தற்போது சமூகம் நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளைத்தான் போலிஸாரின் விசாரணையிலும் கூறினேன் என்றால் ? சரிதான். சம்பவம் நடந்த மறுநாள் காலை 10.00 மணியளவில் திட்டக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன். அன்று நான் சிகிச்சை பெற்ற மருத்துவரிடம் மருத்துவரின் விசாரணையில் என்னை ஒரு நபர் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ? சரிதான். நான் மருத்துவ பரிசோதனைக்கு பிறகு எக்ஸ்ரே

எடுக்கசொன்னார்கள் எடுத்துவிட்டு அந்த எக்ஸ்ரேவை போலிஸாரிடம் ஒப்படைத்துவிட்டு வீட்டிற்குசென்றுவிட்டேன். நான்சொல்வதுபோல் சம்பவம் நடக்வில்லை என்றாலும், எனது கணவர் மீது எதிரிகள் கொடுத்த புகாரின் காரணமாக காழ்புணர்ச்சியால் எதிரிகளுக்கு எதிராக புகார் அளித்து அந்த புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம்அளிகிறேன் என்றாலும் சரியல்ல.

**TYPED TO MYDICTATION OPENCOURT
INPRESENCE OF ACCUSED READOVER
TO THE DEPONENT AND ADMITTED BY
HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI